சிறப்பு அலுவலர் அலுவலகத்துக்கு
கோப்பிற்காக
27 OCT 2010
சென்னை
600 005
நில நிர்வாகத் துறை

சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – நிலவரி வசூல் செயல்முறை எளிமைப்படுத்துதல்–நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 544

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

031000

படிக்கவும்:–

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.

(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணை வெளியிட்டது. மேலும், இக்குழுவின் அறிக்கையை எதிர்நோக்கி 1419–ம் பசலி ஆண்டு முதல் [2009–2010] நிலவரியுடன் இணைத்து வசூலிக்கப்படும் தலவரி, தலமேல்வரி உட்பட ஏனைய வரிகள் நீக்கப்பட்டு நிலவரி மட்டும் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு ரூபாயும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ஐந்து ரூபாயும் வசூல் செய்யப்படும் எனவும் பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழு பிற பரிந்துரைகளுடன், நிலவரி விதிப்பு மற்றும் நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துவது குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

(i) தற்போது நிலஅளவு ஆவணங்கள் அனைத்தும் மெட்ரிக் முறையில் மாற்றப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துவதற்காக 'ஏக்கர்/சென்ட்' கணக்கிற்கு பதிலாக 'எக்டேர்/ஏர்' கணக்கில் வரி விதிப்பு செய்யப்படுதல் வேண்டும். ஒரு எக்டேர் என்பது 2.47 ஏக்கர் ஆகும். எனவே 1 எக்டேர் புஞ்சை நிலத்திற்கு நிலவரியாக ரூ.4.94/– எனவும், 1 எக்டேர் நஞ்சை நிலத்திற்கு நிலவரியாக 12.35/– ரூபாயாகவும் வரி விதிப்பு நிர்ணயம் செய்யலாம், பரப்பளவுக்கு தகுந்தபடி குறைந்தபட்சமாக ரூ.1/– நிர்ணயித்து வசூல் செய்யலாம்.

(ii) தலவரி மற்றும் தலமேல்வரியை நீக்குதல் குறித்து ஏற்கனவே உரிய சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதால் இதனை ஏற்கலாம்.

த.பி.பா.

Verified by RealEstate ™

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் மேற்கண்ட பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) புஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.5/–(ரூபாய் ஐந்து) வீதமும், நஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.12/– (ரூபாய் பன்னிரண்டு) வீதமும் நிலவரியாக வசூலிக்கலாம் எனவும், பட்டா வாரியாக கணக்கிடப்படும் மொத்த தொகையை அருகிலுள்ள முழு ரூபாயாக கணக்கிட்டு கேட்பு நிர்ணயம் செய்யலாம் எனவும் ஆணையிடப்படுகிறது. மேலும் பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை ரூபாய் ஒன்று என நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ii) மேலும் நஞ்சைத்தரிசு மற்றும் புஞ்சைத்தரிசு உள்ளிட்ட புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வரும் விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் அடிப்படை தீர்வைக்குப் பதிலாக, எக்டேர் ஒன்றுக்கு ரூ.12/– (ரூபாய் பன்னிரண்டு மட்டும்) ஆக்ரமணத் (அடிப்படைத் தீர்வை) தீர்வையாக விதிக்கப்படுகிறது. இத்தகைய ஆக்கிரமிப்புகளில் ஆட்சேபகரமானவற்றை அகற்றிட தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், மேலும் நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி இவற்றின்மீது உரிய அபராதமும் விதிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

4. இந்த நடைமுறையை 1419ம் பசலி ஆண்டு முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.

நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை.9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
21/10

VeriPro RealEstate